TNVR090003232020

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம், விருதுநகர்.
(சார்பு நீதிமன்றம், விருதுநகர்.)
முன்னிலை – திரு. P. பாலமுருகன், B.Com., B.L.,
தீர்ப்பாய நீதிபதி/சார்பு நீதிபதி, விருதுநகர்.
2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 23–ம் நாள் திங்கள்கிழமை
M.C.O.P.No.35/2020

மெய்யன் ... மனுதாரர்

/எதிர்/

1. S. சிவபாலமுருகன்
2. கிளை மேலாளர்
நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
விருதுநகர். ... எதிர்மனுதாரர்கள்

இவ்வழக்கானது முதலில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகரில் தாக்கல் செய்யப்பட்டு, மோ.வா.வி.கோ.தீ.மனு.எண்.160/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களின் நடவடிக்கையின்படி D.No.3363, நாள்.21.09.2020–ம் தேதிய உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, மோ.வா.வி.கோ.தீ.மனு. எண்.35/2020 என எண்ணிடப்பட்டுள்ள இம்மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பு 13.03.2026–ம் தேதி இறுதியாக விசாரணைக்காக வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. விஜயகுமார் அவர்கள் ஆஜராகியும், 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. பாண்டியராஜா அவர்கள் ஆஜராகியிருந்த போதிலும் எதிருரை தாக்கல் செய்யாததாலும், அழைத்தும் ஆஜரின்மையாலும் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. S. உமாசெண்பகவல்லி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில்

இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

**உத்தரவு**

கடந்த 22.06.2019–ம் தேதி இரவு சுமார் 08.30 மணியளவில் விருதுநகர் – திருத்தங்கல் மெயின் ரோட்டில் அரசன் பாலிடெக்னிக் கல்லூரி அருகில் நடந்த சாலை விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு ரூ.18,00,000/– கோரி மனுதாரரால் இம்மனு பிரிவுகள் 140, 166 உ/இ விதி 3(1) மோட்டார் வாகன சட்டம் 1988–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இழப்பீடு குறித்த விபரங்கள் : –**

| | | | |
|---|---|---|---|
| 1. | இழப்பீடு கோருதல் | – | காயங்களுக்கு |
| 2. | காயமுற்றவர் பெயர் | – | மெய்யன்,<br>த.பெ. லட்சுமணன். |
| 3. | காயமுற்றவர் வயது | – | 28/2019. |
| 4. | காயமுற்றவர் வேலை | – | ஓட்டுநர். |
| 5. | காயமுற்றவர் வருமானம் | – | ரூ.18,000/– |
| 6. | விபத்து நேரிட்ட நாள், நேரம் | – | 22.06.2019, இரவு சுமார் 08.30 மணிக்கு. |
| 7. | கோரப்பட்ட இழப்பீடு | – | ரூ.18,00,000/– |

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம் : –**

**2.** மனுதாரர் கடந்த 22.06.2019–ம் தேதி இரவு 08.30 மணியளவில் காளீஸ்வரி கல்லூரியில் உள்ள ATM–ல் பணம் எடுக்க TN 67 AA 6064 என்ற ஹீரோ ஹோண்டா இருசக்கர வாகனத்தில் விருதுநகர் – திருத்தங்கல் மெயின் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி மிதமான வேகத்தில், போக்குவரத்து விதிகளை கடைப்பிடித்து, அரசன் கணேசன் பாலிடெக்னிக் கல்லூரி அருகே இடது புறமாக சென்று கொண்டிருந்தபோது, 1–ம் எதிர்மனுதாரர் TN 23 F 3736 என்ற மகேந்திரா மேக்சி கேப் வாகனத்தை எதிர்திசையில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், போக்குவரத்து

விதிகளை பின்பற்றாமலும், எவ்வித சைகையும் செய்யாமலும், இண்டிகேட்டர் போடாமலும் ரோட்டின் வலது புறமாக ஏறி வந்து மனுதாரரின் இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால், மனுதாரருக்கு வலதுபக்க கால் தொடை, வலதுகால் கணுக்கால் மற்றும் வலது கை முழங்கை ஆகிய இடங்களில் எலும்பு முறிவும், நெற்றியில் வெட்டுக்காயமும் மற்றும் உடல் முழுவதும் காயங்களும் ஏற்பட்டது. மனுதாரர் உடனடியாக திருத்தங்கல், குமரன் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக மதுரை, மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மனுதாரருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, 22.06.2019–ம் தேதி முதல் 10.07.2019–ம் தேதி வரை உள்நோயாளியாகவும், தற்போது வெளிநோயாளியாகவும் சிகிச்சை பெற்று வருகிறார். அவரது இடுப்பிற்கு கீழுள்ள வலது பக்க உடலும், வலது கையும் செயலிழந்து விட்டது. மனுதாரர் முற்றிலும் மாற்றுத்திறனாளியாக, 3–ம் நபரின் உதவியின்றி வாழ முடியாது. அவரது இருசக்கர வாகனத்தின் முன்பகுதி முழுவதுமாக சேதமடைந்துள்ளது.

**3.** விபத்து சமயத்தில் மனுதாரருக்கு சுமார் 28 வயது. விபத்து சமயத்தில் ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் இருந்தார். மனுதாரர் ஓட்டுநராகப் பணிபுரிந்து மாதம் ரூ.18,000/– சம்பாதித்து வந்தார். வலது காலில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக அவரால் தானாக நடக்க முடியவில்லை. வலது கை முழங்கையில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக அவரால் கைகளை மடக்கி சாப்பிட முடியவில்லை. நெற்றியில் ஏற்பட்ட காயம் காரணமாக அடிக்கடி லேசான தலைவலி ஏற்படுகிறது. இருசக்கர வாகனம் ஓட்ட முடியவில்லை. தனது குடும்பத்திற்காக சம்பாதிக்க வாகனம் ஓட்ட முடியவில்லை. இதனால் நிரந்தர வேலை இழப்பை சந்தித்துள்ளார். மனுதாரர் தனது மீதமுள்ள வாழ்நாளை நிரந்தர ஊனத்துடன் கழிக்க வேண்டியிருப்பதால், தனது அன்றாட நடவடிக்கைகளுக்கும் மற்றவர்களை சார்ந்திருக்க வேண்டியுள்ளது. காயங்கள்

காரணமாக, வேலையை தொடர இயலாது. அவர் வருமான இழப்பால் அவதிப்படுகிறார். அவரது கால் மற்றும் கையில் வலியும், வேதனையும் உள்ளது. மனுதாரர் தனது குடும்பத்தின் வருமான ஈட்டுபவர் ஆவார். விபத்து மற்றும் கூடுதல் ஊட்டச்சத்து காரணமாக, முழு குடும்பமும் கிட்டத்தட்ட பல நாட்கள் தொடர்ந்து பட்டினி கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், மனுதாரருக்கு நிரந்தர ஊனத்தையும், இழப்பையும், மன வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

**4.** TN 23 F 3736 என்ற எண் கொண்ட வாகனத்தின் உரிமையாளர் 1–ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவான செயலால் மட்டுமே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. அவர் சற்று கவனமாகவும், எச்சரிக்கையாகவும் இருந்திருந்தால் இவ்விபத்து நடந்திருக்காது. எனவே, 1–ம் எதிர்மனுதாரரே விபத்துக்கு பொறுப்பாவார். மனுதாரருக்கு இழப்பீட்டு தொகையை செலுத்தவும் கடமைப்பட்டவர் ஆவார். விபத்து சமயத்தில், 1–ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2–ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனவே, 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ அல்லது தனித்தோ இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர்கள். ஆமத்தூர் காவல் நிலையத்தில் 1–ம் எதிர்மனுதாரர் மீது குற்ற எண்.108/2019, பிரிவுகள் 279, 338 இ.த.ச.–வின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விருதுநகர், நீதித்துறை நடுவர் எண்.2–ல் நிலுவையில் உள்ளது.

**5.** 1–ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜரின்மையாலும், போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும் எதிருரை தாக்கல் செய்யாததாலும் 1–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

<u>2–ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் : –</u>

**6.** மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் இந்த எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மற்றவை

அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை. மனுதாரரின் கோரிக்கை பொய்யானது. மனுதாரர் மனுவில் உண்மைகளை கூறவில்லை. மனுவில் குறிப்பிட்டவாறு விபத்து நடைபெறவில்லை. மனுதாரர் விபத்து நடந்த உண்மையான விதத்தை மறைத்துள்ளார். மனுதாரரின் வயது, தொழில் மற்றும் வருமானம் தொடர்பான கூற்றுகள் உண்மையானவை அல்ல.

**7.** 22.06.2019–ம் தேதி முதல் 10.07.2019–ம் தேதி வரை வருமான இழப்பாக ரூ.3,00,000/–மும், உடைகள் மற்றும் இருசக்கர வாகன சேதங்களுக்காக ரூ.25,000/–மும், போக்குவரத்துச் செலவுக்காக ரூ.10,000/–மும், மருத்துவ செலவுகளுக்காக ரூ.9,00,000/–மும், வலி மற்றும் துன்பத்திற்காக ரூ.3,00,000/–மும், நிரந்தர இயலாமைக்காக ரூ.5,00,000/–மும், சம்பாதிக்கும் திறன் இழப்புக்காக ரூ.5,00,000/–மும் கோரியுள்ளது பொய்யானவை. பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரப்பட்ட இழப்பீடுகளுக்கு இடையே எந்த தொடர்பும் இல்லை.

**8.** மனுதாரர் குறிப்பிட்டது போல் விபத்து நடக்கவில்லை. மனுதாரர் 22.06.2019–ம் தேதி இரவு TN 67 AA 6064 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தை, போக்குவரத்து விதிகளை பின்பற்றாமலும், எதிரே வந்த வாகனத்தை கவனிக்காமலும் ஓட்டிச்சென்று, அரசன் கணேசன் பாலிடெக்னிக் அருகே திடீரென முந்திச்சென்று, 1–ம் எதிர்மனுதாரரின் TN 23 F 3736 என்ற வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார். எனவே, மனுதாரரின் பங்களிப்பு கவனக்குறைவுக்காக இந்த எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் செலுத்த கடமைப்பட்டவரல்ல. விபத்தில் மனுதாரருக்கு உடல் முழுவதும் பல்வேறு காயங்கள் ஏற்பட்டதாகவும், திருத்தங்கலில் உள்ள குமரன், மருத்துவமனையில் உடனடியாக முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, பின் மதுரையில் உள்ள மீனாட்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு, 22.06.2019–ம் தேதி முதல் 10.07.2019–ம் தேதி வரை உள்நோயாளியாக

அனுமதிக்கப்பட்டு, அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாகவும் கூறப்படுவது உண்மைக்கு புறம்பானது.

**9.** விபத்து காரணமாக மனுதாரரால் தானாக நடக்க முடியவில்லை என்றும், வலது கை முழங்கையில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக அவரால் கைகளை மடக்கவோ, உணவை உட்கொள்ளவோ முடியவில்லை என்றும், நெற்றியில் கடுமையான தலைவலி ஏற்பட்டதால் தனது இருசக்கர வாகனத்தை ஓட்டவோ, குடும்பத்திற்காக சம்பாதிக்க வாகனங்களை இயக்கவோ முடியவில்லை என்றும், அதன் காரணமாக நிரந்தர ஊனம் ஏற்பட்டது என்றும் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யானவை. விபத்து சமயத்தில் மனுதாரர் வாகனத்திற்கு காப்பீடு இல்லை. காப்பீடு இல்லாமல் போக்குவரத்து விதிமுறைகளுக்கு எதிராக வாகனத்தை ஓட்டியுள்ளார். மனுதாரர் கோரும் ரூ.18,00,000/- இழப்பீடானது அதிகப் படியானது. எனவே, மனுதாரரின் மனுவை 2-ம் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

10. <u>இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனைகள் யாதெனில் : -</u>

1. இந்த விபத்து யாருடைய கவனக்குறைவினால் ஏற்பட்டது?
2. இழப்பீட்டு தொகையை யார் செலுத்த வேண்டும்?
3. மனுதாரருக்கு எவ்வளவு தொகை இழப்பீடாக கிடைக்கத்தக்கது?

**11.** மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை என குறிப்பிடப்பட்டதன் அடிப்படையில் 2-ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>பிரச்சனை எண்.1 : –</u>**

**12.** இவ்விபத்திற்கு 1–ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு தான் காரணம் என்பதை மெய்ப்பிக்க மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக் கொண்டுள்ளார். ம.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 22.06.2019–ம் தேதி இரவு சுமார் 08.30 மணியளவில் காளீஸ்வரி கல்லூரியில் உள்ள ATM–ல் பணம் எடுக்க மத்தியசேனையில் இருந்து TN 67 AA 6064 என்ற ஹீரோ ஹோண்டா இருசக்கர வாகனத்தில் திருத்தங்கல் – விருதுநகர் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அரசன் பாலிடெக்னிக் கல்லூரி அருகே ரோட்டின் இடது புறமாக தலைக்கவசம் அணிந்து, சாலை விதிகளை கடைப்பிடித்து மெதுவாக கவனமாக ஓட்டி வந்தபோது, அதே ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அரசன் பாலிடெக்னிக் கல்லூரி முன்பு சிவபாலமுருகன் என்பவர் TN 23 F 3736 என்ற மகேந்திரா மேக்சி கேப் நான்கு சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ரோட்டின் வலதுபுறமாக ஏறிவந்து, தான் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் தனக்கு வலதுகால் தொடை, இடுப்புக்கு கீழ் உள்ள உருளை மற்றும் முழங்காலுக்கு கீழ் கெண்டைக்கால் ஆகியவற்றில் எலும்புமுறிவு, நெற்றியின் மேல்பகுதி மற்றும் வலது முழங்கை ஆகிய இடங்களில் இரத்தக்காயம் ஏற்பட்டு கீழே விழுந்த தன்னை அந்த வழியாக வந்த தனது அப்பா மற்றும் பெரியப்பா ஆகியோர் ஆம்புலன்ஸ் மூலம் திருத்தங்கல், குமரன் மருத்துவமனையில் சேர்த்ததாகவும், பின்பு மேல்சிகிச்சைக்காக மதுரை, மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் சேர்த்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**13.** இம்மனுதாரர் அவரது சாட்சியத்தை நிரூபிக்கும் வகையில், மேற்படி விபத்து சம்மந்தமாக ஆமத்தூர், காவல் நிலையத்தில் 1–ம் எதிர்மனுதாரர் சிவபாலமுருகன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, 1–ம் எதிர்மனுதாரர் மீதான

குற்ற இறுதி அறிக்கை ம.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபத்து சம்மந்தமாக 1–ம் எதிர்மனுதாரர் மீது பிரிவுகள் 279, 338 இ.த.ச.–வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதும், 1–ம் எதிர்மனுதாரர் குற்றத்தை தன்னிச்சையாக ஒப்புக்கொண்டதன் பேரில் தண்டிக்கப் பட்டுள்ளதும் ம.சா.ஆ.6–ன் மூலமாக அறிய முடிகிறது. எனவே, மேற்படி விபத்தானது 1–ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டுள்ளது என்பது மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

<u>பிரச்சனை எண். 2 : –</u>

**14.** ஏற்கனவே பிரச்சனை எண்.1–ல் விவாதிக்கப்பட்டுள்ளது போல் மேற்படி விபத்திற்கு TN 23 F 3736 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா மேக்சி கேப் வாகனத்தை ஓட்டி வந்த 1–ம் எதிர்மனுதாரரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவான செயலால் விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்படி 1–ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான மேற்படி வாகனமானது விபத்து சமயத்தில் 2–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி 2–ம் எதிர்மனுதாரர், மேற்படி 1–ம் எதிர்மனுதாரருக்காக இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் என்று இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

<u>பிரச்சனை எண். 3 : –</u>

**15.** மனுதாரர் தனது கோரிக்கை மனுவில் பல்வேறு தலைப்புகளில் இழப்பீடு கோரியுள்ளதால் வசதிக்காக அவை தனித்தனியாக விவரிக்கப்படுகிறது.

<u>பகுதி நிரந்தர இயலாமை : –</u>

**16.** மனுதாரர் தனது சாட்சியத்தில், மேற்படி விபத்தில் தனது வலதுகால் மற்றும் வலது கையில் ஏற்பட்ட எலும்பு முறிவினால் தன்னால் தனியாக

நடக்க முடியவில்லை என்றும், வலது கையை வைத்து சரியாக சாப்பிட முடியவில்லை என்றும், தலையின் முன்பகுதியில் அடிபட்டதால் தனக்கு அடிக்கடி தலைவலி ஏற்படுகிறது என்றும், விபத்தின் காரணமாக தன்னால் நிரந்தரமாக வேலை செய்ய முடியாமல் போய் விட்டதாகவும், வெளியில் வேறொருவரின் துணையின்றி நடமாம முடியாமல் வருமான இழப்பு ஏற்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மதுரை, மீனாட்சி மிசன் மருத்துவமனை வழங்கிய விடுவிப்பு சான்றிதழ்கள் ம.சா.ஆ.10 மற்றும் ம.சா.ஆ.11 ஆகியவற்றின்படி மனுதாரருக்கு வலதுபக்க கால் தொடை, இடுப்புக்கு கீழ் உள்ள உருளை மற்றும் முழங்காலுக்கு கீழ் கெண்டைக்கால் ஆகியவற்றில் எலும்புமுறிவு, நெற்றியின் மேல்பகுதி மற்றும் வலதுகை முழங்கை ஆகியவற்றில் கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேலும், மேற்படி மனுதாரர் மருத்துவ குழு முன்பு ஆஜராகி உள்ளார். மேற்படி மருத்துவ குழுவின் அறிக்கையானது ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் அவருக்கு 58% பகுதி நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரரின் வயது மற்றும் பணியை பொறுத்து ஒவ்வொரு சதவீதத்திற்கும் ரூ.7,500/- என்று தீர்மானித்து 58% ஊனத்திற்காக இழப்பீட்டு தொகையானது ரூ.4,35,000/- (7500 x 58) என்று தீர்மானிக்கப்படுகிறது.

**<u>வருமான இழப்பு மற்றும் சம்பாதிக்கும் திறனை இழந்தமைக்காக : -</u>**

**17.** மேற்படி மனுதாரர் அவரது மனுவிலும், சாட்சியத்திலும் ஓட்டுநராக பணிபுரிந்து மாதம் ரூ.18,000/- வரை சம்பாதித்து வந்ததாக சொல்லியுள்ளார். ஆனால், அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே, அவரது வருமானத்தை கணக்கிட நமது சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த பின்வரும் வழிகாட்டு நெறிமுறை பின்பற்றப்படுகிறது.

**In Andal & Others – Vs – Avinav Kannan & Another – (CDJ 2018 MHC 8221), our Hon'ble Madras High Court** has held as follows:

> **The CBDT vide Notification No.370142(E)(No.26/2008)(L. No.370/42/3/2008-TPL), dated 13.6.2008 specifies the Cost of Inflation index as mentioned in Column No.3, for the financial year mentioned in the corresponding entry in Column No.2 in the below said Tabular Column:**

| S.No. | Financial Year | Cost of Inflation Index |
|---|---|---|
| 1. | 2001-2002 | 100 |
| 2. | 2002-2003 | 105 |
| 3. | 2003-2004 | 109 |
| 4. | 2004-2005 | 113 |
| 5. | 2005-2006 | 117 |
| 6. | 2006-2007 | 122 |
| 7. | 2007-2008 | 129 |
| 8. | 2008-2009 | 137 |
| 9. | 2009-2010 | 148 |
| 10. | 2010-2011 | 184 |
| 11. | 2012-2013 | 200 |
| 12. | 2013-2014 | 220 |
| 13. | 2014-2015 | 240 |
| 14. | 2015-2016 | 254 |
| 15. | 2016-2017 | 264 |
| 16. | 2017-2018 | 272 |
| 17. | 2018-2019 | 280 |
| 18. | 2019-2020 | 289 |
| 19. | 2020-2021 | 301 |
| 20. | 2021-2022 | 317 |

**As per the above said index, the Cost of Inflation Index for the year as 2007-2008 is 129 and for the year 2013-2014 will be 220. Now we determine the Notional Income of the deceased in the manner stated below:**

**The Notional Income fixed by the Cost of Inflation Index for the year_Hon'ble**

**Supreme x Cost of Inflation Index for the Court of India for the vegetable vendor i.e., Rs.6,500 during the year 2007-2008 year 2013-2014 Cost of Inflation index for the year 2007-2008 Therefore, Income of the deceased is- Rs. 6500 x 220 / 129 = Rs. 11085/-.**

**The Notional Income of the deceased after applying Inflation Index, will be a sum of Rs.11,085. Hence, we re-fix the Notional Income of the deceased as Rs. 11,000 from Rs.6,500. Therefore, we hold that the Tribunal committed an error in fixing the Notional Income of the deceased as stated above.**

மேற்படி வழிகாட்டு முறையின்படி மேற்படி மனுதாரரின் மாத வருமானம் ரூ.6500x289/129=14,562/- என மாத வருமானம் கணக்கிடப்பட்டு, அவரது மாத வருமானம் ரூ.14,500/- என எடுத்துக்கொள்ளப்படுகிறது. மேலும், மேற்படி மனுதாரர் வருமான இழப்பிற்காக ரூ.3,00,000/-மும், சம்பாதிக்கும் திறனை இழந்தமைக்காக ரூ.5,00,000/-மும் ஆக மொத்தம் ரூ.8,00,000/- கோரியிருந்தாலும் அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும், மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்காக ம.சா.ஆ.7-ன்படி 22.06.2019-ம் தேதி திருத்தங்கல், குமரன் மருத்துவமனையில் முதலுதவியும், ம.சா.ஆ.10-ன்படி 23.06.2019-ம் தேதி முதல் 10.07.2019-ம் தேதி வரையிலும், ம.சா.ஆ.11-ன்படி 23.08.2019-ம் தேதி முதல் 27.08.2019-ம் தேதி வரையிலும் மதுரை, மீனாட்சி மிசன் மருத்துவமனையிலும் உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வந்துள்ளார். எனவே, அவரது மாத வருமானம் ரூ.14,500/- என தீர்மானித்து மேற்படி 24 நாட்களுக்கான இழப்பீடாக ரூ.11,592/- (ஒரு நாள் 483 X 24 நாட்கள்) என்று தீர்மானிக்கப்படுகிறது.

**<u>போக்குவரத்து செலவு : -</u>**

**18.** மனுதாரரை மருத்துவமனைக்கு எடுத்து சென்ற செலவிற்காக

ரூ.10,000/– கோரியிருந்தாலும், மேற்படி மனுதாரர் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும், மேற்படி மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையை பொறுத்தும், சம்பவயிடம் மற்றும் சிகிச்சை பெற்ற மருத்துவமனைக்கு உள்ள தூரத்தை பொறுத்தும் மேற்படி மனுதாரருக்கு ரூ.5,000/–த்தை போக்குவரத்து செலவாக வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**கூடுதல் சத்துணவு செலவு மற்றும் மருத்துவ செலவுகளுக்காக : –**

**19.** மனுதாரர் கூடுதல் சத்துணவு செலவு மற்றும் மருத்துவ செலவிற்காக ரூ.9,00,000/– கோரியுள்ளார். கூடுதல் சத்துணவு செலவிற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எனவே, மேற்படி மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை காரணமாகவும், விரைவாக நலம் பெரும் பொருட்டு அவருக்கு சத்தான உணவுகள் வழங்கப்படுவது என்பது அவசியமானதாகும் என்பதால் மனுதாரருக்கு ரூ.20,000/– சத்துணவு செலவிற்காக வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது. மேலும், மேற்படி மனுதாரர் திருத்தங்கல் குமரன் மருத்துவமனையில் முதலுதவியும், மதுரை, மீனாட்சி மிசன் மருத்துவமனையில் மேல் சிகிச்சையும் பெற்றுள்ளார். மேற்படி திருத்தங்கல் மருத்துவமனையில் மருத்துவ பில்கள் ம.சா.ஆ.7–ன்படி ரூ.7,273/–ம், மதுரை, மீனாட்சி மிசன் மருத்துவமனை பில்கள் ம.சா.ஆ.8–ன்படி ரூ.5,37,168/–ம் மருந்து, ஆய்வகம், எக்ஸ்ரே மற்றும் சிகிச்சை ஆலோசனைக்காக செலுத்தப்பட்டதாக கண்டுள்ளது. அதன்படி மேற்படி மருத்துவ செலவாக மேற்படி மனுதாரர் மொத்தம் ரூ.5,44,441/– (7,273+5,37,168) செலவு செய்துள்ளார். எனவே, மேற்படி மனுதாரருக்கு மேற்படி தொகை ரூ. 5,44,441/–ஐ மருத்துவ செலவிற்காக வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

<u>வலி, துன்பம் : –</u>

**20.** மனுதாரர் வலி துன்பத்திற்காக ரூ.3,00,000/–ம் கோரியிருந்தாலும், மனுதாரர் தன் தரப்பில் தாக்கல் செய்த விடுவிப்பு சான்றிதழ்கள் ம.சா.ஆ.10–ன்படி 23.06.2019–ம் தேதி முதல் 10.07.2019–ம் தேதி மற்றும் ம.சா.ஆ.11–ன்படி 23.08.2019–ம் தேதி முதல் 27.08.2019–ம் தேதி வரை மதுரை, மீனாட்சி மிசன் மருத்துவமனையில் அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக சிகிச்சை பெற்றுள்ளார். எனவே, மேற்படி மனுதாரர் அவருக்கு ஏற்பட்ட காயத்தினால் உடல் மற்றும் மன அளவில் கடுமையான வலி மற்றும் துன்பத்தை அனுபவித்திருப்பார். அதனால் ஏற்பட்ட வலி மற்றும் துன்பத்திற்காக ரூ.30,000/–ம் வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

<u>ஆடை அணிகலன்கள் மற்றும் இருசக்கர வாகன சேதார செலவுகள் :–</u>

**21.** மேற்படி மனுதாரர் ஆடை அணிகலன் மற்றும் இருசக்கர வாகனத்திற்கு ஏற்பட்ட சேதத்துக்காக ரூ.25,000/– செலவானதாக குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் மேற்படி மனுதாரர் அவரது இருசக்கர வாகனத்திற்கு சேதம் ஏற்பட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வறிக்கையோ அல்லது வேறு ஆவணங்களோ தாக்கல் செய்யவில்லை. அதனால் மனுதாரருக்கு மேற்படி தலைப்பின் கீழ் எவ்வித இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என்று தீர்மானிக்கப்படுகிறது. மேலும், ஆடை அணிகலன்களுக்கு ஏற்பட்ட சேதாரத்திற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எம். சின்னத்தம்பி – எதிர் – எஸ். தீபா மற்றும் ஒருவர் 2020(1) TNMAC 617 என்ற வழக்கில் ஆடைகளுக்கு ஏற்பட்ட சேதாரத்திற்காக ரூ.3,000/– வரை வழங்கலாம் என்று கூறியிருந்தாலும் ரூ.1,000/– வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

<u>**உடன் இருந்தோர்க்கான செலவுகள் : –**</u>

**22.** மனுதாரர் கடந்த 22.06.2019–ம் தேதி, 23.06.2019–ம் தேதி முதல் 10.07.2019–ம் தேதி மற்றும் 23.08.2019–ம் தேதி முதல் 27.08.2019–ம் தேதி வரையிலும் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். மனுதாரர் தனது சாட்சியத்தில், தான் வெளியில் வேறொருவரின் துணையின்றி நடமாட முடியாமல் இருந்து வருவதாக சொல்லியிருந்தாலும், மனுதாரர் சிகிச்சை பெற்ற சமயத்திலும், அதற்கு பின்னரும் தனது உதவிக்காக ஆட்கள் யாரையும் வைத்துக் கொண்டதாகவோ அல்லது அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும், மனுதாரர் சிகிச்சையில் இருந்த காலத்தில் அவருக்கு உதவியாக அவரது குடும்பத்தினர் யாரேனும் உடன் இருந்திருப்பர். எனவே, மேற்படி மனுதாரர் கடந்த 22.06.2019–ம் தேதி திருத்தங்கல், குமரன் மருத்துவமனை, 23.06.2019–ம் தேதி முதல் 10.07.2019–ம் தேதி வரை மற்றும் 23.08.2019–ம் தேதி முதல் 27.08.2019–ம் தேதி வரை மதுரை, மீனாட்சி மிசன் மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த காலமான 24 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.200/– வீதம் மொத்தம் ரூ.4,800/– (200x24) வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட செலவுகள் குறித்து விபத்து நஷ்டஈடு கீழ்க்கண்ட தலைப்புகளில் கணக்கிடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரருக்கு ஏற்பட்ட பகுதி நிரந்தர இயலாமைக்காக – | ரூ.4,35,000/– |
| 2. | மனுதாரருக்கு ஏற்பட்ட வருமான இழப்பிற்காக – | ரூ.11,592/– |
| 3. | மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஏற்பட்ட போக்குவரத்து செலவிற்காக | ரூ.5,000/– |

| | | | |
|---|---|---|---|
| 4. | மருத்துவ சிகிச்சையில் இருந்தபோது கூடுதல் சத்துணவு செலவிற்காக | – | ரூ.20,000/– |
| 5. | மருத்துவ செலவுகளுக்காக | – | ரூ.5,44,441/– |
| 6. | மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஏற்பட்ட வலி, துன்பத்திற்காக | – | ரூ.30,000/– |
| 7. | மனுதாரருக்கு விபத்தின்போது ஏற்பட்ட ஆடை அணிகலன்களுக்காக | – | ரூ.1,000/– |
| 8. | இருசக்கர வாகன செலவுக்காக | – | –– |
| 9. | மனுதாரருக்கு விபத்து ஏற்பட்ட சமயத்தில் அவருக்கு உடன் இருந்தோர்க்கான செலவுகளுக்காக | – | ரூ.4,800/– |
| | ஆக மொத்தம் | – | ரூ.10,51,833/– |

மேற்படி கணக்கீட்டின்படி மனுதாரருக்கு ரூ.10,51,833/– இழப்பீடு தொகையாக கிடைக்கக்கூடியது என்று இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டு, 2–ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகை ரூ.10,51,833/–ஐயும், அத்தொகைக்கு மனு தாக்கல் செய்த நாளிலிருந்து செலுத்தும் நாள் வரை ஆண்டுக்கு 7.5% வட்டியுடன் (மனு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால் அந்த காலத்தை தவிர) செலுத்த வேண்டும் என்றும், மேதகு இந்திய உச்சநீதிமன்றம் வழங்கிய Parminder Singh Vs. Honey Goyal and others (S.L.P.No.4488 of 2020) dated 18.03.2025 என்ற முன்தீர்ப்பின்படி 2–ம் எதிர்மனுதாரர் இன்றிலிருந்து 2 மாத காலத்திற்குள் மேற்படி இழப்பீட்டு தொகையை நேரடியாக மனுதாரர் வங்கி கணக்கான State Bank of India, Sivakasi Town Branch, Account No.35177738026, IFSC Code : SBIN0009664 MICR Code :

626002003–ல் NEFT / RTGS மூலமாக செலுத்த வேண்டும். அவ்வாறு தொகை செலுத்திய பின் வங்கி அட்வைஸை இந்த தீர்ப்பாயத்திற்கும், மனுதாரருக்கு அல்லது அவரது வழக்கறிஞருக்கும் அனுப்ப வேண்டும். 2–ம் எதிர்மனுதாரரால் தொகை செலுத்திய பின்பு மனுதாரர் முழு இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுகளை பெற்றுக் கொள்ளலாம் என்றும், நீதிமன்ற கட்டணம் ஏதும் பாக்கி இருந்தால் இன்றிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும், நீதிமன்றக் கட்டணம் அதிகமாக செலுத்தப்பட்டிருந்தால் மனுதாரர் திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணம் ரூ.17,518/–.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 23–ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

BALAMURUGAN Digitally signed by BALAMURUGAN

தீர்ப்பாய நீதிபதி/சார்பு நீதிபதி,
விருதுநகர்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் : –</u>**

ம.சா.1 – திரு. மெய்யன்

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் : –</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | : | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை – நகல் |
| ம.சா.ஆ.2 | : | மனுதாரரின் பான்கார்டு – நகல் |
| ம.சா.ஆ.3 | : | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் – நகல் |
| ம.சா.ஆ.4 | : | மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் – நகல் |
| ம.சா.ஆ.5 | : | குற்ற இறுதி அறிக்கை – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.6 | : | S.T.C. No.2703/2019–ன் தீர்ப்புரை – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.7 | : | மருத்துவ பில்கள் – அசல் |
| ம.சா.ஆ.8 | : | மருத்துவ பில்கள் – அசல் |
| ம.சா.ஆ.9 | : | நுண்கதிர்படம் (11 எண்ணம்) |
| ம.சா.ஆ.10 | : | விடுவிப்பு சான்றிதழ் – அசல் |
| ம.சா.ஆ.11 | : | விடுவிப்பு சான்றிதழ் – அசல் |

ம.சா.ஆ.12 : மனுதாரரின் ஊனச்சான்றிதழ் – அசல்

**<u>2–ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : –</u>**

இல்லை.

BALAMURUGAN Digitally signed by BALAMURUGAN

தீர்ப்பாய நீதிபதி/சார்பு நீதிபதி,
விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
எம்.சி.ஓ.பி.எண்.35/2020
சீரான உத்தரவு
நாள்.23.03.2026